தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

VOL. V.—NO. 12.] MADRAS:—SUNDAY MARCH, 21, 286 A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

கடவுட்கியானம்.	பரம் ஒன்றா பலவா?
வேதோபந்நியாசம்.	மதச்சின்னம்.
சமயப்புராதனம்.	பெரியபாளையம்.
சமயிகள்போர்.	கடிதம்.

கடவுட்கியானம்.

நாம் உலகத்தின்கண்ணே பிரபலித்து விளங்குகின்ற சாஸ்திரங்களையும், சமயநூல்களையும் நூதனவிவேகத்தைக்கொண்டு நோக்கிப்பார்க்கையில், எல்லாம் அபூரணக்கியானமுடைய மனிதரால் செய்யப்பட்டனவாக இருக்கின்றனவேயல்லாமல் பூரணக்கியானமுடையோனென்று ஆத்திகராலே சொல்லப்படுகின்ற ஓர் சர்வஞ்ஞனாலே செய்யப்பட்டனவாகத் தோன்றவில்லை. ஆனால் எல்லா உற்பவங்களுக்கும் ஓர் காரணமிருப்பச் சர்வஞ்ஞருக்கும், சர்வஞ்ஞானத்திற்கும் காரணமில்லாதிருக்கின்றதேனெனின் கூறுவாம். ஆதியிலே மனிதர்கள் தமது ஐம்புலாதிகளுக்கும் விஷயமாகாத யாதையும் கருத்துட்கொள்ளவில்லை. ஆயினும் அவர்களுக்கு அப்போதிருந்த நிஷ்கபடத்துவ சிந்தைக்கு எட்டாத காரணங்களுக்கு ஒவ்வோர் நாமஞ்சூட்டி அக்காரணங்களுக்குடைய அசாத்திய சக்தியைப் புந்தியில் நிதானித்துத் தம்மினும் விசேஷமாகிய சில உற்பாத காரணங்கள் உலகத்திலே உண்டென்றும், அவை தமக்கு அசாத்தியமான விஷயங்களைக் கோபங் காரணமாகவும் சந்தோஷங் காரணமாகவும் இயற்றி வருகின்றனவென்றும் ஓர் மனோபாவங்கொண்டு, அம்மனோபாவத்தைப் பலர்க்கும் வெளியிட, அவர்களும் அக்காலத்தில் தமது புந்திக்கு எட்டாத விஷயங்களைப்பற்றி எண்ணி இளைத்திருந்தமையால், இவர்கள் சொன்ன காரணங்களே அவ்வுற்பாத சம்பவங்களுக்குக் காரணமாதல் வேண்டுமென்று சம்மதித்து அவ்வுற்பாத காரணங்களுக்கு தேவர்கள் என்கின்ற பொதுப்பெயரும் வருணன், வாயு, குபேரன், ஈசானியன், நிருதி, சூரியன், சந்திரன், அக்கினி யென்னும் சிறப்புப் பெயரும் கொடுத்துவந்தார்கள். மழை ஒவ்வோர்காலத்தில் பெய்கின்றமையால், அதற்கொரு காரணகர்த்தா இருத்தல் வேண்டுமென்றும், அவரே வருணனென்றும், இப்படியே வாயு அக்கினி முதலிய திக்குப்பாலகர்களும் ஏனைய தேவர்களும் காரணகர்த்தாக்களாக விருக்கின்றார்களென்றும் எண்ணி அம்மனோசிருட்டி தேவர்களுக்கு வணக்கம், பலி, ஆராதனை முதலிய உபசாரங்கள்செய்து வந்தார்கள். பிரதமநூல்களாகிய இருக்காதி வேதங்களில் மிகு முக்கியமாய் இத்தேவர்களை ஸ்தௌத்தியம் செய்திருப்பதற்குங் காரணம் இதுவே யென்க. நம்மிந்துதேசத்தார்கள் மாத்திரம் இங்ஙனம் செய்தவர்களல்லர். கிரேக்கர், ஸ்பானியர், அமெரிக்கர் முதலிய இன்னுஞ் சிற்சில தீவார்களும் இங்ஙனமே செய்து வந்தார்களென்று அவர்கள் பூர்வசரித்திரங்களும் சாஸ்திரங்களும் சான்று பகர்கின்றன. இதனால் தேவக்கியானம் சகல சனங்களுக்கும் கபடற்றகாலத்தில் அறியாமை காரணமாக ஜெனித்து அவருக்குப் பின் வந்தோர்களால் சிந்தனை யில்லாது அபிமான நீர் பெய்து வளர்க்க வளர்ந்து நாளாவர்த்தியில் தேவக்குஞ்சுகள் பலுகிப்பெருகி ஜனசங்க மேலிட்டதுபோல தேவர்கூட்டங்களும் நாளுக்குநாள் மேலிட்டேவந்தன. நாகரீகம் விர்த்தியாகவாக சில தேவர்கள் அநுசரணை ஆராதனையற்று ஒழிந்தும் வருகின்றார்கள்.

இப்படியே இடிக்கொருதேவர், மின்னலுக்கொருதேவர், மழைக்கொரு தேவர், ஜலத்திற்கொரு தேவர், காற்றிற்கொரு தேவர், நெருப்புக்கொரு தேவர், மலைக்கொரு தேவர், ஆகாயத்திற்கொரு தேவர்களாய்ச் சிருட்டிசெய்துவிட்டதுமல்லாமல் இவர்களை ஏகாங்கிகளாய் வைப்பது நன்றல்லவென்று இவர்களுக்கு மனைவி மக்களையும், சுவர்க்கமத்தியபாதாளமென்னும் ஸ்தானங்களையும், இவர்களுடைய நடையுடை பாவனையாதிகளைச் சூசிக்கப் புராணகாவியங்களையும் சிருட்டித்துவிட்டார்கள். இம்மட்டோடே போகாமல் ஒவ்வொரு தேவர் உண்டென்றும் வழிபட்டு வணங்கி வருகின்றார்கள். பின்னர் கல்வி, நாகரிகம் முதலியன விர்த்தியாகவாக, பல பிரஜைகளுக்கும் ஓர் அரசன் இருப்பதுபோலும், பல அரசர்களுக்கும் ஒவ்வோர் சக்கிரவர்த்தியிருப்பதுபோலும், அச்சக்கிரவர்த்திக்கு மேலும் ஓர் மண்டலேஸ்வரன் இருப்பதுபோலும் இத்தேவர்களுக்கும் அதிகாரதேவர்களுண்டென்றும், அவர்களுக்கும் மேலான தேவர்களிருந்தே நடத்திவருகின்றார்களென்றும் ஏற்படுத்தி வேதபாஷியாதிநூல்களை இயற்றினார்கள். இத்தியாதி மனோசிருட்டிகளாகிய தேவதா பணிக்கூட்டங்களெல்லாம் தத்துவஞான திசையிலிருந்து உதயமாகிவரும் சுவஞான சூரியனுக்குமுன்னே யெண்டிசாமுகத்தும் இரிந்தோடும். ஆனால் பழமை, அபிமானம், மந்தமதி, மதவைராக்கியம், மூர்க்கம் முதலிய இலைகளடர்ந்த மனோ வனங்கள்மத்தியில்மட்டும் அச்சுவஞான சூரிய கிரணங்கள் விரைவில் புகுந்து ஒளி விசாது, அவ்விலைகள் தாமே பழுத்து உதிர்ந்த பின்னர் அல்லது கல்வித் தீப்பட்டெரிந்த பின்னரே புகுந்து ஒளிவீசும்.

வேதோபந்நியாசம்.

(௪௨-வது பக்கத் தொடர்ச்சி.)

கிறீஸ்துமதத்திலுள்ள நீதிகள் வேதம் அல்லது இந்துமதத்தில் கிடையாதென்று சொன்ன பாதிரியார் இன்னின்ன நீதி கிறீஸ்துமதத்திலுள்ளது, அது இந்துமதத்தில் கிடையாதெனக் காட்டுவான்வேண்டி ஒன்றாகிய தெய்வவழிபாடு, பலஸ்திரீகமனம் இன்மை, நரபலி முதலிய பலியிடுதலின்மை முதலிய சில நீதிவசனங்களைக்காட்டித் தம்மதம் பரிசுத்தமுடையதென விவகரித்தார். அதன்மேல் திவான்பகதூர் கிறீஸ்துமதத்தில் கொலை, களவு, கள், காமாதிகளைப் பிரேரேபித்திருக்கும் பாகங்களைக்காட்டி யவற்றின் பரஸ்பரவிரோதத்தை யெவர்க்கும் விளக்காமல் அவர் தம்மதத்தின்மேல் சாத்திய தோஷத்தை நிவர்த்திப்பான்வேண்டி பாதிரியார் எடுத்துக்காட்டிய பிரதிகூல வாக்கியங்களுக்கெல்லாம் அனுகூலபாவனா அர்த்தம் உண்டென்று தமது கல்விவிசேஷத்தால் பிரபலித்துப் பூரித்தார். அதற்கு அப்பாதிரியார் சம்மதிக்காதவராகிச் சில பரஸ்பரவிரோதங்களைக்காட்டி அவை பொருளல்லவென்று தான் இன்னொருபோது ரூபிப்பதாய்ச்சொன்னார். இதனோடு தேவர்கள் என்பதற்குச் சுருசுருப்பானவர்கள் பிரகாசமுள்ளவர்கள் என்பது பொருளானால், அவர்கள் இடி மழை முதலிய அசாத்தியமான காரியங்களை யுண்டாக்கினார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றமையாலும், ஓர் உலகத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்லமையுடையார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றமையாலும் அவர் மனிதர்களாக எப்படி எண்ணப்படுவார்கள்? இது பரஸ்பரவிரோதமாயிற்றேயென்றும் மறுதலித்தார். வேதாங்கீகாரிகளாகிய உட்சமயத்தாரே வேதவசனங்களுக்குப் பொருள் செய்வதில் ஒருவர் சொன்னபடி ஒருவர் சொல்லாமல் விவாதித்து பலவேறு சமயங்களும், பலவேறு அனுசரணைகளும், பலவேறு ஒழுக்கங்களும் உடையவர்களாய் மண்டையுடையச் சண்டையிட்டு மடிகின்றனரே, புறச்சமயி இதற்கெப்படி ஒப்புவர்? இவ்வியாக்கியானி தம்மவரையே ஒருமிக்கச்செய்து தாம் சாதிக்க வெளிவந்திருக்கும் விதவாவிவாகத்தை முடிக்கச் சக்தியில்லாதவராயிருக்க, ஊர்கூடிச் செக்குத்தள்ளுவதுபோல பிறமதத்தவரையெங்ஙனம் ஒருமிக்கச்செய்வர். இது அம்பரத்திற்கு ஏணியிட்டு ஆகாயக்கோட்டைகட்ட முயல்வதேயாம். விவேகிகளாயுள்ள யூகிகள் எவ்வாற்றானும் நியாயத்தையே பின்பற்

றல்வேண்டும். அபிமானத்தைப்பற்றிச்செல்வது அவலமாய்முடியும். இப்படித் தன் முதுகிலுள்ள அழுக்கைத் தொடைத்துக்கொள்ள ஏலாத திவான் தத்துவக்கியானிகள்மேல் பழுதுசொல்லி சபாரஞ்சிதப்படுத்தினது வெகுவியப்பு.

தத்துவக்கியானிகளில் மில்பெயின், வால்டேர் முதலியவர்கள் விசாரணையில் வெகுதொலை சென்றிருக்கின்றார்களென்றும், அவர்கள் சொல்வதெல்லாம் வெகுவாய் சுவானுபவத்திற்கு ஒத்திருப்பதென்றும், அவர்கள் சொல்லுக்குமேல் இரண்டு மூன்றுபடி கடந்துபோனால்தான் முடிவாகிய உண்மை விளங்குமென்றும், அவர்கள் போனமட்டும் ஒன்றுமில்லையென்று முடித்துச் சகலமும் பதார்த்த சக்தியேயென்று சொல்கின்றார்களென்றும், அப்பதார்த்த சக்தியே நாமெல்லோரும் வழிபடத்தக்க கடவுளென்றும் சொன்னார். திவான் அவர்கள் தத்துவக்கியானிகள் காட்டிய படிகளுக்குமேலும் சகலரும் நிர்விவாதமாய் சொல்லத்தக்க படிகளிருக்குமேல் காட்டலாகாதா? காட்டின் இவர்க்கு அது பரோபகாரமாகாதா? அதனால் இவர் இப்போது எடுத்து அவாந்தரத்தில் விடுத்த கக்ஷியினும் பெருத்த கீர்த்தி விளையாதா?

முன்னர் கிறீஸ்துவை நம்பி விசுவாசித்தால்தான் மோக்ஷமுண்டு என்று பறையறைந்து திரிந்த பாதிரிகள் சுவஞான அபிவிர்த்தியை நோக்கி "இதேது முதலிற்கே மோசம் வருகிற" தென்றெண்ணி எத்தேவனுகிலும் தேவனொருவனுண்டென்றால் போதும் என்கிறார்களே: இதற்கா இவர்களுக்கு மாதவேதனம் ரூபாய் 400-500 - ஏற்படுத்தி இவர்களை எண்டிசாமுகத்தும் அனுப்புவது? கிறீஸ்துமதத்திலும் கொலை களவு கள் காமாதிகளைப்புரிந்த துன்மார்க்கரையும் சன்மானஞ்செய்திருக்கிறதே அது இந்துவேதத்தினும் எப்படிச் சிரேட்டமடைந்தது? அது பழைய ஏற்பாட்டிலெனின், பழைய ஏற்பாடு கிறீஸ்து மதாங்கீகாரமன்றே. அன்றேல் அதை யேன் எவ்வளவோ பொருள் செலவிட்டுப் பதித்துப் புதிய ஏற்பாட்டுடன் ஒன்றுசேர்த்துக் கட்டுவித்துக் காயிதக்கிரையமுங் கட்டிவராத இழிய விலைக்கு விற்றுவருவானேன்? அதையேன் கிழித்தெறிந்துவிடப்படாது? கிறீஸ்துமதத்திலும் பொருள்பேதத்தால் எத்தனையோ பிரிவுகள் பிரிந்திருக்கின்றனவே, அவற்றை ஒருமைப்படுத்த சக்தியற்ற பாதிரிகள் பிறசமயத்தாரைத் தம்மோடு ஒருமைப்படுத்த முயல்வது எவ்வளவு அசாத்தியம்? ஓர் சுத்தவீரன் பெண்டு பிள்ளைகளோடு இரணகளஞ்சென்று போர்புரிவானேல், அவன் புத்திர மித்திர களத்திராதிகளோடு மாண்டு மடிவது திண்ணம், அவர்களையெல்லாம் நிறுத்தி வாளாதி ஆயுதங்களைக்கொண்டு செல்வானேல் அவன் வெற்றியடைவன். இதுபோல ஓர்வாதி கால்வைத்தால் சறுக்கக்கூடிய நியாயவழுக்குடைத்தாய சமயசாத்திரங்களை ஆதாரமாகக் கொண்டு சமயப்போர் புரியப்போவானேல், அவன் அபஜெயமடைவது திண்ணம். அவற்றையெல்லாம் கட்டிப் புறம்போட்டுவிட்டு, நியாயவாள்கொண்டு நிற்பானேல் அவனை வெல்வதரிது. ஆதலால் நமது திவான் அவர்கள் சமயப்பற்றைவிட்டு நியாயபீடிகைமேல் நின்று பிரமாணவாளேந்திச் சமயப்போர் புரிவாரேல் வெற்றியடைவர். எதிரி சேனையை வெட்டாதிருந்தால் சண்டையும் முடியாது, ஜெயமும் சித்திக்காது. எதிரி சேனையை வெட்டினால்தான் ஜெயமுண்டு. அதுபோல பிறமதத்தைக்கண்டித்து அதிலுள்ள பரஸ்பரவிரோதத்தைக் காட்டினால்தான் வெற்றியுண்டு இல்லாவிட்டாலில்லை.

இதைவிட்டு வழவழ கொழகொழவென்னும் விவகாரத்தால் ஒன்றும் அருது. தென்றல்முற்றிப் பெருங்காற்றாகும். இதனை உபயவாதிகளும் அனுசரித்தொழுகுதல் வேண்டும்.

சமயபுராதனம்.

(௭௩-ம் பக்கத் தொடர்ச்சி.)

பாரசீகக் குடிகளில் பெரும்பான்மையோர் கல்வியும் நாகரிகமுமின்றி நிர்மூடரைப்போல என்பு பலகறை முதலியவற்றை ஆபரணங்களாக அணிந்தும், தோல் இலைகளை ஆடைகளாக உடுத்தியும், நானாவித மாமிசாதிகளை பாகஞ்செய்யாதுண்டும், ஓரிடத்திலும் நிலையாயிராது நாடோடிகளாகத் திரிந்தும் ஜீவனஞ் செய்து வந்த இவர்கள் தங்கள் தேசத்திலுண்டான பஞ்சத்தால் அன்னவஸ்திராதிகளுக்கு வருவழியற்று கீழ்க்கண்டமாகிய இவ்விந்துதேசத்தை வந்து பார்க்க பூலோகத்தின் கண்ணே சிறந்து விளங்காநின்ற இத்தேசம் எக்காலத்தினுங் குறைவுபடாத நீர்வளமுள்ள கங்கை, சிந்து, யமுனை, காவேரி முதலிய பெரியதும் சிறியதுமான பல நதிகளை அடுத்தடுத்துடையதாயும், வாழை, பலா, மா, தெங்கு, கரும்பு முதலிய பலனுள்ள பலசோலைகளையும், சண்பகம், பாதிரி முதலிய விருக்ஷங்களால் நெருங்கி வண்டுகள் பாடுகின்ற மலர்ச்சோலைகளையும், பரிமளகந்தம் வீசும் அழகிய நானாவித மலர்கள் மலர்ந்திருக்கும் செடிகளில் அம்மலர்களுக்சேற்ற பலவித வருணங்களையுடைய சிறிய புள்ளினங்கள்,காண்போர் எவருங் களிக்கும்படி யம்மலர்களில் ஒழுகும் மதுரத்தை அருந்த அருஞோதயங்களில் மலர்கள்தோறும் பரந்துதிரியும் வண்டினங்களையுடைய நந்தவனங்களையும், தாமரைத்தடாகங்களையும், நீர் நிறைந்து அல்லி நீலம் முதலிய புட்பங்கள் மலர்கின்ற ஓடைகளையும், ஏரி குளம் முதலிய பல நீர் நிலைகளையும் செந்நெல் முதலிய பலவித பயிர்கள் மாறாது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய புலங்களையும், அரசமண்டபங்கள், விசித்திரமண்டபங்கள், விநோதமண்டபங்கள், நியாயஸ்தலங்கள், கல்விச்சாலைகள், பாடசாலைகள், ஆயுதசாலைகள், சிலம்பக்கூடங்களு முடையதாயும், பொன், வெள்ளி இரத்தின வகைகள், யானைதந்தம், பரிமளகந்தம் வீசும் சந்தனமரம் இவை முதலியவை ஏராளமாக அகப்படத்தக்கதாயும் எத்தேசத்திலும் இதுவே சிறந்து விளங்குவதைக் கண்டு களிப்புற்று, இப்பரியாயதிப்பத்தில் குடியேற ஆரம்பித்து முதலில் சிந்துநதிவரையில் குடிபுகுந்து, பின்பு கங்காநதியோர முழுவதும் வியாபித்துப் பரவினார்கள். அதன்பின் இமயமலை முதல் விந்தியமலை வரையிலும், யமுனாநதிமுதல் கங்காநதிவரையிலும் தங்கள் வசமாக்கி, இமயமலை முதல் விந்தியமலை வரையில் ஆரியவர்த்தமெனவும், அவர்கள் பலங்கொண்ட இடமாகிய சிந்துநதி முதல் சரஸ்வதியாறு வரையில் பிரமவர்த்தமெனவும், விந்தியமலைக்குத் தெற்கிலிருப்பவை யனைத்துந் தண்டகாரண்யமெனவும், அவ்வாரண்யத்தில் ஆரியர் குடியேறலாகாதெனவும் விதித்தனர். ஆரியரினின்று இத்தேச மன்னவரும், மன்னவரினின்று ஆரியருந் தோன்றி இருப்பதைக் கருதாது, தங்கள் சுயஜாதியார் விர்த்தியான அநேக வருஷங்களுக்குப் பின் திடங்கொண்டு, பூருவ இந்துக்களுக்குள் பக்ஷபாதமின்றி நானு சமயத்தாரையுந் தற்காக்குந் தன்மையுள்ள சட்டதிட்டங்களேற்பட்டு அவனவன் தன்தன் மதநிபந்தனைகளையும் கிரியைகளையும் திண்டாட்டமின்றி அனுஷ்டித்து வரும்படி விதிக்கப்பட்டிருந்த சட்டதிட்டங்களை ஆரியர் ஒழிக்கச்செய்து, தங்கள் சட்டதிட்டங்களையே சார்ந்தொழுகும்படி நயத்திலும் பயத்திலும் பலவந்தஞ்செய்து தங்களுக்குக் கீழ்ப்படுத்திக்கொண்டு, தங்களை மந்திரிகளாகவும், சேனாதிபதிகளாகவும் உயர்த்தவேண்டுமென மகுடவர்த்தனர்களைக் கேட்டமைந்து எங்கும் வியாபித்துப் பரவினார்கள். இவர்கள் தங்கள் சுயகுலத்தவர்கள் விர்த்தியடைந்த அநேக நூற்றாண்டுகளுக்குப் பின் நிரக்ஷரேகைக்கு அதி தொலைவில் இருந்ததினால் சிவந்திருக்குந் தங்களை உயர்குலத்தாரெனவும், சூரியவெப்பத்தால் கறுத்திருக்கும் இத்தேச பூருவகுடிகளை கீழ்குலத்தாரெனவும் இரு வகுப்பாகப் பிரித்து, இத்திசைக் குடிகளைக் கீழ்ப்படுத்தித் தாங்கள் மேன்மையடைவதற்காக ஜிண்டவஸ்டா பிடகாக்கியமெனும் இருவகை வேதங்களினின்றும் முதலில் ருக்வேதத்தை எழுதி அதை பௌத்தமத இறைவர்களிடத்தில் காண்பித்து இவ்வேதந் தாங்கள் கடவுளால் பெற்ற வரப்பிரசாதமெனவும், அதனை ஓதத் தாங்களே உரியவர்களெனவும் இனி இத்தேசம் தங்களால் நற்சீருக்கு வர எதிர்நோக்கிக்கொண்டிருக்கிற தெனவுமொழிந்து, அதனை யாவரையும் அங்கீகரிக்கும்படி உபாயதந்திரஞ் செய்தார்கள். அதனை யாவரும் அங்கீகரித்தபின் தாங்கள் உயர்ந்த ஜாதியாரெனவும், க்ஷத்திரியர் முதலானவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களெனவும், இத்தேசப் பூர்வ குடிகளைத் தொடுவதினால் தீட்டெனவுஞ் சாதித்து, இத்தேசமன்னர் முதலானவர்களுடன் கலந்திருந்த பாரசீகராகிய ஆரியர் தங்கள் சுயகுலத்தவர்களுக்குள் ஓர் சங்கங்கூடி, வேதம் ஓதுபவர்களை வேதியரெனவும், புஜபல பராக்கிரமத்தை க்ஷாத்திரத்துடன் சாதிப்பவர்களை க்ஷத்திரியரெனவும், வாணிபம் செய்வோரை வைசியரெனவும், மற்றைய தொழில்களை இயற்றுவோரை சூத்திரரெனவும் வகுத்து தொழிலினாலே ஜாதி வகுப்புப் பிரித்தார்கள். மனு என்பவர் அச்சங்கத்திற்குச் சபாநாயகராக இருந்ததினால் அச்சபையில் எழுதப்பட்ட நூலுக்கு மனுதரும நூலென்று பெயரிடப்பட்டது. அம்மனுவுக்கு சுவாயம்பு, சுவாரோசிஷன், தேபஸ, சூரியாவதன், சாக்குஷன், வைவசுவதன் என்ற ஏழுபெயர் தவிர, வேறு ஏழுபெயர் உபபலமாக இருந்து உதவி புரிந்தனர். இவர்களுக்கும் இவர்கள் பின் சந்ததியாருக்குமே பிராமணரெனவும், வேதியரெனவும் அந்தணரென்வும் பெயராம்.

(இன்னும்வரும்.)

M. MASILAMONI.

சமயிகள் போர். 3

(சூ௦-வது பக்கத்தொடர்ச்சி.)

சுப்பாநாயக்கன்.

இவ்வளவுதானு சிவதூஷண சிங்கய்யங்காரே இன்னுமிருக்கிறதையெல்லாம் வெளிப்படுத்துங்கள்.

சிவதூஷண சிங்கய்யங்கார்.

ஆ! ஆ!! சிவனைத் தலையெடுக்காமலடிக்கிறதற்கு அநேகமிருக்கின்றன. நீ கேட்டால் போதும் சொல்லுகிறேன் கேள். பாகவதத்தில், சிவனை ஆராதிக்கிறவர்களும் அவர்களது கோட்பாட்டின் அனுசாரிகளும் பத்தரும் வேதசாஸ்திரங்களுக்கு விரோதிகளுமா யிருக்கிறார்கள் - மேலும் பந்தத்தினின்று நீங்கி வீட்டையடைய விரும்புகிறவர்கள் பயங்கரமான பைசாச தேவர்களை விட்டுக் கழித்துச் சாந்தமும் நிரபராதமு முடையவரான நாராயணனைத் தொழவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பத்மபுராணத்தில் வாசுதேவனைத் தொழாமல் விட்டு விட்டு மற்ற தேவனை யாராதிக்கிறவன் எப்படிப்பட்டவனென்றால் தாகமாயிருக்கிற ஒருவன் தண்ணீருக்காக கங்கைக்கரையில் ஒருகிணறு வெட்டுகிற மதிகேடனுக் கொப்பாயிருக்கிறான்.

சிவன் பார்வதிக்கு உபதேசிக்கிறபடி விஷ்ணுவைவிட்டு மற்ற தேவர்களைத் தொழுகிறவர்களையும், மற்ற தேவர்களை விஷ்ணுவுக்குச் சமமென்று சொல்லுகிறவர்களையும், வைஷ்ணவரல்லாத எல்லாப் பிராமணரையும் நேரிட்டுப் பார்க்கவுமொண்ணாது, தீண்டவுமொண்ணாது, அவரோடு பேசவுமொண்ணாது.

சிவபத்தருக்குச் சிறந்த கோலமாகிய கபாலம், புலித்தோல், விபூதி இவைகளைத் தரிக்கவொண்ணாதென்று வேதத்தில் விலக்கப்பட்டிருக்கின்றது. சுருதிசூரிதத்தில் சொல்லியிருக்கிறபடி நமுசி முதலாகிய தைத்தியர்களுடைய தபோபலத்தினால் அவர்களை யெதிர்க்க இந்திரன் முதலாகிய தேவர்களுக்கு வல்லமையில்லா திருந்ததைப்பற்றித் தேவர்கள் விஷ்ணுவினிடத்தில் முறையிட்டுக்கொண்டார்கள் விஷ்ணுவானவர் சிவனைநோக்கி நீ சென்று தைத்தியருக்குச் சைவகோட்பாட்டையும் சைவ ஆசாரங்களையும் கற்பித்து வஞ்சித்து விபூதிகபாலம் புலித்தோல் முதலாகிய வைகளைத் தரிக்கும்படிச்செய்து அவர்களைத் துன்மார்க்கர்களாகவும் ஈனர்களாகவுஞ்செய்துவிடும்படி கட்டளையிட்டார்.

இச்செய்கையில் சிவனுக் குதவியாய்த் தாமசகுணத்திலும் அறிவின்மையிலுந் தோய்ந்திருக்கிற பத்துப்பெரிய இருடிகளையும் அனுப்புவித்தார். அவர்கள் தீயபாஷண்ட-பதித-கோட்பாடுகளை யெழுதிப் பரம்பச்செய்தார்கள், அந்த இருடிகள் ஆரென்றால் கனதன், மௌதமன், சாகதி, உபமனு, ஜயமுனி, கபிலன், துருவாசன், மிருகண்டேயன், பிரகற்பதி, பார்க்கவன், இவர்களேயாம்.

பாசுபதகிரந்தங்கள் சிவனாலேயே செய்யப்பட்டன, கநாடம், வைசேஷிகசாஸ்திரம் நியாயசாஸ்திரம் கௌதமராலுண்டுபண்ணப்பட்டது, சாங்கிய வித்தியாலயம் கபிலராலுண்டாக்கப்பட்டது, சார்வாகமதம் பிரகற்பதியாலுண்டு பண்ணப்பட்டது, மீமாம்சம் சிவனுடைய உத்தரவின்படி வேதப்புரட்டாய் ஜயமுனியால் செய்யப்பட்டது. சிவனே வியாசனென்கிற பிராமணனாய்வந்து வேதாந்தம் பிரசுரஞ்செய்தார், அந்த வேதாந்தம் வைஷ்ணவருடைய மதிப்பில் வேதவிலக்கான எதிர்போதகமா யோசிக்கப்படுகிறது; ஏனெனில், அந்த வேதாந்தத்தில் கடவுளை பொறிபுலனுக்கெட்டாத குணங்களை யுடையவனென்று சொல்லி யிருப்பதினாலேயாம். விஷ்ணுவானவர் புத்தனாகி நிருவாணியாய்த் திரியவும் அல்லது கறுப்புவஸ்திரந் தரிக்கிற ஆசாரங்களையும் போதிக்கிற சாஸ்திரங்களைக் கற்பித்தார். புராணங்களும் ஒருபங்கு மனிதரைக் குருடராக்குகிற இந்தவேலையில் ஆயுதங்களாக இருக்கின்றன.

மச்சியம், கூர்மம், இலிங்கம், சைவம், ஸ்காந்தம், ஆக்கினேயம் இவைகள் ஏறக்குறையச் சைவத்தைச்சேர்ந்த அந்தகார தாமசபுராணங்களாக விருக்கின்றன. வைணவம், நாரதீயம், பாகவதம், காருடம், பதுமம், வராகம் இவைகள் சாத்துவீகபரிசுத்த சத்தியமான புராணங்கள். இவை வைஷ்ணவருக்குச் சோதனைக் கிரந்தங்களாகவிருக்கின்றன.

பிரமாண்டம், பிரமகைவர்த்தம், மார்க்கண்டேயம், பௌடியம், வாமனம், பிரமம் இவைகள் இரஜோகுணபுராணங்கள், கோபமுதலாகிய குணங்களிலிருந்து விடுவிக்கின்றன. இவைகள் சாக்தேயத்தைச் சார்ந்திருக்கும் மார்க்கண்டேயம் பிரசித்தமாய்ச் சிறப்புற்ற சண்டிபதம் தூர்க்கைமகத்துவம் அடங்கியிருக்கின்றன. தூர்க்கை பூஜாகாலத்தில் ஓதப்படுகின்றது, பிரம்மகைவர்த்தபுராணம் கோவிந்தனாகிய கிருஷ்ணனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதில் முக்கியமாய் கிருஷ்ணனைக்குறித்தும் அவனுடைய தேவியாகிய ராதாவைக்குறித்தும் எடுத்துப் பேசியிருக்கின்றது. மேலும் பிரகிருதியை உருவகப்படுத்திப் பேசியிருக்கின்றது.

இந்தப்பிரகாரமே ஸ்மிருதிகளாகிய தருமசாஸ்திரங்களும் பிரிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

வசிஷ்டர், அரீதர், வியாசர், பராசர், பரத்துவாசர், கசியபர் இவர்களுடைய தருமநூல்கள் பரிசுத்தமானவைகள். யாஞ்ஞுவற்கியர், அத்திரி, தித்திரி, தட்சகன், காத்தியாயன், விஷ்ணு இவர்களுடைய தருமநூல் ராஜஸவகுப்பு. கௌதமன், பிரகற்பதி, சம்வர்த்தகர், இயமன், சாங்கியர், உசானன் இவர்களுடைய தருமநூல் தாமசவகுப்பு.

சாத்வீக புராணங்களையும் அதற்குள்ள தருமநூல்களையும் வாசிப்பவருக்கு முத்தியுண்டாம், ராஜஸபுராணங்களையும் அதற்குள்ள தருமநூல்களையும் வாசிப்பவருக்குச் சுவர்க்கபதவியுண்டாம், தாமசபுராணங்களையும் அதற்குள்ள தருமநூல்களையும் வாசிப்பவருக்கு நரகமேயுண்டாம், அறிஞர் அவைகளை விலக்குவார். பி. போ.

(இன்னும்வரும்.)

பரம் ஒன்ரு பலவா?

தற்காலம் சில பாதிரிமார்களுக்கும், திவான்பகதூர் இரகுநாதராவவர்களுக்கும் இந்துவேதத்தில் கூறியபடி பரம் ஒன்ரு பலவா வென்னும் விவகாரம் நிகழ்ந்துவருவதை இப்பத்திரிகையை வாசித்துவருபவர்கள் அறிவர். ஆனால் இவ்விவகாரம் கிறிஸ்துமதத்தில் கூறப்பட்டுள்ள பரம் ஒன்றேயென்றும், இந்துமதத்திலே பரங்கள் பலவென்றும் சிலேடர் பாதிரியார் உபந்நியாசஞ் செய்ததின்மேல் விளைந்தது. தற்காலம் திவான் அவர்கள் இந்துவேதத்தில் பரம் ஒன்றேயென்று ரூபிக்க வேற்பட்டிருக்கிறார். அஃது விஷயம் யார்பால் ஜெயத்தை விளைக்கின்றதோ நாம் வெகு சீக்கிரத்தில் தெரிந்துகொள்ள நேரிடும். ஆனால் கிறீஸ்துமதத்தில் பரம் ஒன்ரு பலவாவென்று நாம் சற்று யோசிப்பதத்யாவசியகமே. ஏனெனில், இருவர் கட்சியின் வலிமையையும் தூக்கிப்பார்ப்பது சுயக்கியானிகளின் கடமையாதலாலெனக. விவிலியநூலானது முழுவதும் கடவுளின் அருள் வாக்கென்று சொல்லப்படினும், அதனுள் சிற்சில வாக்கியங்கள் கடவுளினால் மனிதர்களுக்கு நேரே சொல்லப்பட்ட தேவவாக்கியங்களென்று கொள்ளவேண்டியவைகளுமுண்டு. அவற்றுள் கடவுளால் தரப்பட்டதென்று சொல்லப்படும் பத்துக்கற்பனைகளுள் முதற்கற்பனையும் ஒன்ருகும். அஃது வருமாறு: என்னைவிட வேறு தேவர்களை வழிபடாதிருப்பீர்களாக. மேலைய வாக்கியத்தால் நாமறியவேண்டியது பரம் ஒன்றென்பதையா, பலவென்பதையா? மேலைய வாக்கியத்தைக்கூறிய கடவுள் தன்னைவிட வேறு கடவுளர்கள் இருந்தாலன்றி, மேலைய வாக்கியத்திற்கிடந்தருவரா? மேலும் தன்னைவிட வேறு கடவுளர்கள் இல்லாதபட்சத்தில் யாவரும் தன்னை வழிபடல் வேண்டுமென்று பொதுவாய்க் கூறாமல் தன்னைவிட வேறு தேவர்களை வழிபடாதிருக்கக்கடவீர்களென்றும் வேறு கடவுளர்களை வழிபட்டுத் தொழுவோரை தலைமுறை தலைமுறையாகத் தண்டிப்பதாகவுங்கூற விடமிராது. D.

மதச்சின்னம். 48

வாக்குவாதம்.

மதாபிமானி—ஐயா! சுயக்கியானியாரே, தாங்கள் நெற்றியில் ஒன்றுமிடாமலிருக்கின்றீரே, உங்களைப் பார்ப்பவர்கள் பறையனென்று பரிகாசஞ்செய்யார்களா?

சுயக்கியானி—ஐயா! பறையர்களை யேன் பார்ப்பவர்கள் பரிகாசஞ்செய்யவேண்டும். அவர்களும் நம்மைப்போல் மனிதர்கள்தானே. மேலும் பறையர்கள்தான் என்ன, மதச்சின்னங்களை நெற்றியில் வைப்பதில்லையா? இவைகளையெல்லா மோசிக்காமல் எம்மைநோக்கிப பார்ப்பவர்கள் பறையனென்று பரிகாசஞ்செய்வார்கள் என்று கூறுகின்றீரோ அஃதென்னை?

மதா—ஐயா! கோபித்துக்கொள்ளவேண்டாம். நான் பறையனென்று சொன்னதற்கு அருத்தம் கிறீஸ்தவன் என்பதே.

சுய—ஆ! ஆ!! நன்று! நன்று!! இவ்வுலகத்தில் நெற்றியில் விபூதி, திருச்சூரணம், சந்தனம், கரிக்கோடு, குங்கும முதலியவைகளை யிடாதவர்கள் கிறீஸ்தவர்கள் ஒருமதத்தினர்

தாம்போலும்! மகம்மதியர்களும், சீனர்களும், பாஷாண்டிகளும் என்ன சின்னங்களை நெற்றியிற்றரிக்கின்றனரோ வறிகிலேன்.

மதா—ஐயா! சுயக்கியானியாரே ஏளிதஞ்செய்யவேண்டாம். நாங்களெல்லாம் அலங்காரமாக நெற்றியில் ஏதோவோர் சின்னங்களை வைத்திருக்கின்றேமே. அவ்வாறுகவே தாங்களும் ஓர் சின்னத்தை நெற்றிக்கலங்காரமாக வைத்துக்கொள்வீர்களென்று சொல்லியதேயல்லாமல் வேறல்ல.

சுய—ஏன் ஐயா! மற்ற தேசத்தாரெல்லாம் நெற்றியிலொன்றும் வையாதிருக்க, நாம்மாத்திரம் அவ்வாறு செய்யவேண்டும்? அவர்களுடைய நெற்றிகளெல்லாம் பூரணவழகு வாய்ந்திருப்பதும், நமது வதனமாத்திரம் அபூரணமாய்ச் செய்யப்பட்டு அலங்கோலமா யிருப்பதென்றெண்ணியா? அல்லது உலகத்தில் யாவருடைய வதனங்களும் சிருட்டியின்கண் பூரணமெய்தாது அவலட்சணமா யிருக்கின்றனவென்பதும், அவ்வவலட்சணத்தை யறிந்துள்ளவர்கள் நம்போலிய விந்துக்களுமென்பதுமா? ஆயின் மனிதனைச் சிருட்டித்தவர் என்று சொல்லப்படும் கடவுளிற்கு அபூரணத்துவத்தை நாட்டுவதொக்குமே. ஆகவே நீங்கள் உங்கள் மதிமுகத்திற் சேற்றை வாரிப் பூசிக்கொள்ளுவ தொருபக்கமிருக்க, உங்களால் உங்களுக்குச் சிருட்டிகர்த்தாவென சிருட்டிக்கப்பட்டுள்ள கடவுளின் பூரணத்துவத்திலும் மண்ணைப்போட வேற்பட்டீரோ. இஃதென்ன கொள்ளை!

மதா—ஐயா! சுயக்கியானியாரே, நாமெடுத்துக்கொண்ட இவ்விஷயத்தில் நியாயம் பேசுவதிற் பிரயோசனமில்லை. அநுபோகத்தை யொட்டியே பார்க்கவேண்டும். மாங்கல்லியந்தரித்து மஞ்சள் பூசிவரும் மாங்கல்லிய ஸ்திரீயையும், மாங்கல்லியமிழந்த விதவைஸ்திரீயையும் வைத்துப்பார்த்தால் இலட்சணமின்னதென்றும், அவலட்சண மின்னதென்றும் விளங்கும்.

சுய—ஐயா! நியாயத்தைவெறுத்து அநுபோகத்தையே யொட்டிப்பார்க்க உத்தேசித்த நீவிர் விதவைக்கும் மஞ்சளைச் சமமாய் பூசியல்லவா இலட்சணுலட்சணங்களைச் சீர்தூக்கிப்பார்க்கவேண்டும். அஃது செய்யாமை யார்குறை கூறும். நமது குறையா! விதவையின் குறையா? D.

பெரியபாளையம்.

தன் தந்தையாகிய ஜமதக்கினியின் சொற்கேட்டு தன் தாயாகிய எல்லம்மாளை அவள் புரிந்த விபசாரகுற்றத்திற்காக அவளை படுகொலை செய்ததினிமித்தம் வியசனமுற்றிருந்த பாசுராமனது மனவருத்தத்தை ஒருவாறு நிவர்த்திக்க சென்னைக்கடுத்த பெரியபாளையத்தில் ஓர் சிறிய ஆலயங்கட்டி, அவள் பெயரால் ஒரு விக்கிரகஞ்செய்து அதில் நாட்டி, அவள் சோரநாயகனுல் நிருவாணமாக்கப்பட்டு சையோகிக்கப்பட்டதற்காக வெட்டப்பட்டதுபோல, இத்தெய்வத்திற்குப் பிரார்த்தனை செலுத்துபவர்கள் தாங்கள் அணிந்திருக்கும் ஆடைகளைக்களைந்து, வேம்பு இலைகளால் தங்கள் அவயவத்தை மறைத்து, நிருவாணமாகவே அவ்வாலய பிராகாரத்தை மூன்று சுற்று வந்து, அவள் வெட்டப்பட்டதுபோல ஆடுமாடுகளை வெட்டி தண்டாகாரமாக விழுந்து வணங்கும்படி பிராமணர் ஏற்படுத்தினர். முறையேநாளதுவரையில் பெரியபாளையத்தில் அவ்வுற்சவம் வருஷத்தில் ஐந்துநாட்கள் பிராமணர்முதல் சமஸ்த ஜாதியாராலுங் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தகையோருக்கு சுய அரசாட்சிவேண்டுமோம்.

M. Masilamoni.

கடிதம்.

பணக் கலியாணம்.

ஐயா, இங்கு சிலர் பத்து பன்னிரண்டு வயது பெண்களை மனைவியிழந்த ஐம்பது அறுபது வயதுசென்ற புருடர்களுக்கு கலியாணம் செய்துகொடுத்து ஆயிரம் ஐந்நூறு பணம் வாங்கிக்கொள்ளுகிறார்களே, அதைப்போல பதினைந்து பதினாறு வயதுள்ள பிள்ளைகளை புருஷனிழந்த ஐம்பது அறுபது வயதுசென்ற ஸ்திரீகளுக்கு கலியாணம் செய்துகொடுத்து பணம் வாங்கிக்கொள்ளாதிருப்பதேன்? இதன் விபரம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

தம்பதிதருமமும் பதிபத்தினிவிரதமும்
பத்தினிபதிவிரதமும் பாலிக்கவேண்டும்.

இங்ஙனம், சந்தேகி.

வர்த்தமானம்.

பர்மாவுக்கு சேனை—இராஜப்பிரதிநிதியவர்களும் முக்கிய சேனுதிபதியவர்களும் பர்மாவுக்கு அதிகப்படி சைனியம் அனுப்பவேண்டிய விஷயத்தைக்குறித்து மிஸ்டர் பெர்னுட் அவர்களுடன் ஆலோசனை செய்ததில், இப்பொழுது பர்மாவிலிருக்கும் சைனியங்களே தேசத்தை அடக்கி யாளுவதற்குப் போதுமானதா யிருக்கிறதென்றும், அதிகப்படி சைனியம் அனுப்பவேண்டிய தில்லையென்றும், தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால் பர்மாவுக்குப் புறப்படுவதற்குத் தயாராயிருக்கும்படி உத்தரவு செய்யப்பட்ட பட்டாளங்கள் இனி யப்படி தயாராய[illegible]டிய அவசியமில்லையென்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

புத்தகுரு மரணம்.—சிலோனிலே புத்தர்களுட்சிறந்த குரு ஒருவர் பிப்ரவரிமீ 3உ காலஞ்சென்றனர். அவர் தேகத்தை மிக்க விபவத்தோடு தகனஞ் செய்தார்கள். அப்போது அங்கிருந்த கர்னெல் ஆல்காட்டு அவர்கள் அச்சமயத்தைத் தமது பிரசங்கத்தினுல் சிறப்பித்தனர். தகனத்தின்போது புத்த குருவுக்கு மரியாதை செய்வதின்குறியாக கொள்ளியிடும்படி புத்தர்கள் கர்னெல் ஆல்காட்டை வேண்டினார்கள். அவர் அதற்கிணங்கவில்லை. அதற்கும் இவர் மதத்திற்கும் சம்பந்தமில்லைபோலிருக்கிறது. இதை இந்துக்கள் சிலர் தெரிந்துகொள்ளாமல் கோழையில்விழும் ஈக்களைப்போல் விழுகிறார்கள்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.) வெளியூர்—(அட்வான்சு.)

	Rs.	As.	P.		Rs.	As.	P.
மாசம் 1-க்கு	0	4	0	மாசம் 1-க்கு	0	6	0
ஷை 3-க்கு	0	10	0	ஷை 3-க்கு	0	14	0
ஷை 6-க்கு	1	2	0	ஷை 6-க்கு	1	10	0
வருஷம் 1-க்கு	2	2	0	வருஷம் 1-க்கு	2	13	0

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செலுத்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாயும், வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய் - 1-14-0-ம் செலுத்தவேண்டும்.

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசுவாமிநாயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களையும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொசைடி ஆனரெரி செக்ரிட்டேரி மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயரால் வேப்பேரிக்கும் அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.